திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : மெட்ராஸ் இனாம் எஸ்டேட் ஆக்டினுடைய நோக்கத்திற்கு எதிரிடையாக அதன் பயனை விவசாயிகள் பெற முடியாதபடி அமெண்ட்மெண்ட் இருப்பதால், இதை நீக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதுதான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். இந்தமாதிரியான நிலைமை வந்ததற்குக் காரணத்தைப் பார்க்கவேண்டும்.

According to the original provision in section 9 of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, the landholder of an inam estate has to prove the cultivation test for a period of 3 years within a continuous period of 12 years before 1st April 1960, if he has to get a ryotwari patta in respect of a private land. On repeated representations from several religious institutions and on the recommendation of the Board of Revenue, the Government amended this section so that religious institutions can get patta without proof of personal cultivation test, This amending legislation was undertaken in consultation with the Government of India also. The main reason for undertaking this amending legislation was that due to certain administrative instructions issued by the Hindu Religious and Charitable Endowments Department, religious institutions were prevented from resorting to personal cultivation. The present representation is that the original provision that the religious institutions also should prove personal cultivation test should be restored, as otherwise there will be a discrimination between the ryots in inam estates owned by the religious institutions and inam estates owned by other landholders. On a suggestion from the Hon. Minister for Law, it is being re-examined.

மதுராந்தகம் வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்

* 95 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுராந்தகம் வட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்ற செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : மதுராந்தகம் வட்டத்தை செய்யூர் உப வட்டம் என்று பிரிக்கிற வகையில் 3 ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஆய்வு செய்யப்பட்டது என்று பேசப்படுகிறதே, அது உண்மைதானா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. தே. கேசவலு : ஒரு வட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்றால் என்ன என்ன தகுதிகள் இருக்கவேண்டும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஒரு வட்டத்தை இரண்டாகப் பிரிக்க இவை தான் தகுதிகள் என்று வரையறுத்துச் சொல்ல முடியாது. மாவட்ட நிர்வாகத்தை நல்லமுறையில் அமைக்க புதிய மாவட்டங்களை ஏற்படுத்தலாமா என்பது பற்றி எல்லாம் பரிசீலிக்க ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அது சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. அதில் பல நல்ல அம்சங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நிர்வாகம் செம்மையான முறையில் அமைய ஒரு மாவட்டம் 20 லட்சம் ஜனத்தொகைக்கு மேற்படக் கூடாது, 20 ப்ளாக்குகள்தான் இருக்கவேண்டும். சிறிய ஜில்லாக்களாக இருந்தால் கலெக்டர் நல்ல முறையில் நிர்வகிக்க முடியும். புதிய மாவட்டங்கள் என்று அமைக்கிறபோது சரித்திர பூர்வமாக, பூகோள்பூர்வமாக, அந்த அந்த பகுதியில் பிற்போக்கு நிலைமைக்கும் ஏற்றவகையில், தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் எப்படி எப்படி அமைக்கப்படலாம் என்பதுபற்றி பரிந்துரை சொல்லப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது.

சென்னை கலெக்டர் அலுவலகக் கட்டடம்

* 96 வினா.—திரு. [redacted] எஸ். [redacted] இராமச்சந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை கலெக்டர் அலுவலகம் எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடிய நிலையிலிருப்பதால் அதனை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் உண்டா ?

(இ) இல்லையானால் அரசு எடுக்கப்போகும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) & (இ) சென்னை வாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டடம் அதைப் பயன் படுத்திக் கொள்வதற்குத் தகுதியற்ற நிலையிலோ அல்லது அபாய மான நிலையிலோ இல்லை. ஆனால், தற்போதுள்ள சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைந்துள்ள பழைய உயர்நீதி மன்றக் கட்டடம் உள்ள இடத்தில் அதற்குப் பதிலாகப் பல அடுக்கு மாடிக் கட்டடம் ஒன்று கட்டுவதற்கான செயற் குறிப்பு ஒன்று அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்பொழுது உள்ள அந்தக் கட்டடத்தைக் கட்டடப் பொறியியல் வல்லுநர் சோதனையிட்டுப் பார்த்தார்களா ? அப்படியானால் அந்தக் கட்டடம் எவ்வளவு காலம், எத்தனை ஆண்டுகளுக்குத் தாங்கும் என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் ? பல அடுக்கு மாடிக் கட்டடம் கட்டப் போவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS